**சென்னை–6, மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்குநர்(தொஅஈ) பொ அவர்களின் செயல்முறை ஆணை**

**முன்னிலை : மரு.ஜெ.ராஜமூர்த்தி, M.B.B.S., D.C.H.,**

**ந.க.எண்: 1637/தொஅஈ/அந/1/2014** **நாள்: 29.06.2022.**

பொருள்: அலுவலக நடைமுறை – தமிழ்நாடு அமைச்சுப் பணிகள் – கருணை அடிப்படையில் பணி நியமனம் – திருமதி.ஆ.கவிதா, க/பெ.(அமரர்) திரு.கா.செந்தில்குமார், ஓட்டுநர், தொஅஈ மருத்துவமனை, ஓசூர்) – கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்டது – பணி வரன்முறை – ஆணை வழங்கல் – தொடர்பாக.

பார்வை:

1. அரசாணை (நிலை) எண்:560, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்(க்யூ 1) துறை, நாள்:03.08.1977 மற்றும் அதன் தொடர்புடைய ஆணைகள்.
2. அரசாணை (நிலை) எண்:120, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்(க்யூ 1) துறை, நாள்:26.06.1995.
3. அரசாணை (நிலை) எண்:42, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்(க்யூ 1) துறை, நாள்:12.03.2007.
4. அரசாணை (நிலை) எண்:202, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்(க்யூ 1) துறை, நாள்:08.10.2007.
5. அரசாணை (நிலை) எண்:155, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்(க்யூ 1) துறை, நாள்:08.10.2007.
6. அரசாணை (நிலை) எண்:48, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்(க்யூ 1) துறை, நாள்:26.02.2021.
7. அரசு கடித எண்:8755/ஏடி2/2021–1, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்(ஏடி 2)துறை, நாள்: 16.03.2021.
8. இவ்வியக்கக பணி நியமன ஆணை ந.க.எண்:1637/தொஅஈ/அந/1/2014, நாள்: 29.11.2018.

*******

ஓசூர், தொஅஈ மருத்துவமனையில் ஓட்டுநராகப் பணிபுரிந்து, பணியில் இருக்கும் போதே, 05.02.2014அன்று காலமான திரு.கா.செந்தில்குமார் என்பவரது தற்காலிகப் பணி ஓட்டுநர் பதவியில் 08.06.2009 முற்பகல் பணி வரன்முறைப்படுத்தப்பட்டு, 07.06.2011 பிற்பகல் தகுதிகாண் பருவம் முடித்துள்ளார். இறந்த அரசு ஊழியரின் பிறந்த தேதி 22.04.1968, அவர் ஓய்வு பெற வேண்டிய நாள் 30.04.2026 ஆகும். இறந்த அரசு ஊழியரின் வாரிசுதாரராகிய அவரது மனைவி திருமதி.ஆ.கவிதா என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பணி வேண்டி, உரிய கால கெடுவுக்குள், உரிய ஆவணங்களுடன் விண்ணப்பித்திருந்தார்.

பார்வையில் கண்டுள்ள, அரசாணைகள் மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் விதி (பணி நிபந்தனைகள்) பிரிவு 17(1) 2016 (தமிழ்நாடு சட்டம் 24/2016) –ன் படி, ஓசூர், தொஅஈ மருத்துவமனையில் ஓட்டுநராகப் பணிபுரிந்து, பணியிடையே 05.02.2014 அன்று, இயற்கை எய்திய திரு.கா.செந்தில்குமார் என்பாரின் மனைவியும், வாரிசுதாரருமாகிய திருமதி.ஆ.கவிதா (பிறந்த தேதி: 22.03.1983) தமிழ்நாடு அமைச்சுப் பணியின் கீழ், கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராக ரூ.19500–62000/– நிலை 8 (Level–8) என்ற சம்பள முறையில் பணி நியமனம் செய்யப்பட்டு, மருத்துவம் மற்றும் ஊரக நலப்பணிகள் இயக்ககம்(தொஅஈ)–ல் 13.12.2018 முற்பகல் முதல் இளநிலை உதவியாளராகப் பணியில் இணைந்தார். தற்போது பணிமாறுதலில் சேலம், மண்டல நிர்வாக மருத்துவ அலுவலர்(தொஅஈ) அலுவலகத்தில் பணிபுரிந்து வருகிறார்.

எனவே, கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட திருமதி.ஆ.கவிதா என்பவரின் தற்காலிக இளநிலை உதவியாளர் பணி, பார்வை 6–ல் காணும் அரசாணையின்படி, அவர் பணியில் இணைந்த நாளான 13.12.2018 முற்பகல் முதல் அவர் அப்பணிக்குத் தேவையான உடற் தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு, பணி வரன்முறை செய்து ஆணை வெளியிடப்படுகிறது. இவர் "பணிவரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து இரண்டு வருட கால தகுதிகாண் பருவத்தினை தொடர்ச்சியான மூன்று ஆண்டு கால அவகாசத்திற்குள் வெற்றிகரமாக முடித்திடல் வேண்டும்". மேற்படி காலத்தில் மருத்துவ விதித் தொகுதி தேர்வு மற்றும் பவானி சாகர் சுருக்கப்பட்ட அடிப்படை பயிற்சி (Civil Service Training Institute Bhavanisagar Foundational Training) தேர்ச்சி பெற வேண்டும். இவ்வாணை வெளியிடப்படுவதன் மூலம், தனியர் ஆண்டு ஊதிய உயர்வு / ஊதிய நிலுவை இருப்பின், அதை பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

ஓம்/–ஜெ.ராஜமூர்த்தி
மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள்
இயக்குநர்(தொஅஈ)பொ

பெறுநர்:
திருமதி.ஆ.கவிதா,
இளநிலை உதவியாளர், மண்டல நிர்வாக மருத்துவ அலுவலர்(தொஅஈ), சேலம்.
(சேலம், மண்டல நிர்வாக மருத்துவ அலுவலர்(தொஅஈ) மூலமாக)

நகல்:
1. மண்டல நிர்வாக மருத்துவ அலுவலர்(தொஅஈ), சேலம்.
2. இவ்வியக்கக நிர்வாகப் பிரிவு–2
3. இருப்புக்கோப்பு/ உபரி.

//உண்மை நகல்//அனுப்பப்படுகிறது//

நிர்வாக அலுவலர்(தொஅஈ)

Endor. No. 2380/E2/2020 o/o RAMO (ESIS), Salem
Dt. .9.1.2022

To.
A.Kavitha, Junior Assistant,
o/o RAMO (ESIS), Salem
Forwarded

REGIONAL ADMINISTRATIVE
MEDICAL OFFICER (E.S.I.)
SALEM